**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது – கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்ட நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை**

அரசாணை (நிலை) எண்: 59

நாள் : 06.06.2019
விகாரி வருடம்
வைகாசித் திங்கள் 23–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.27, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2) துறை, நாள் 26.03.2018.
2. அரசாணை (நிலை) எண்.69, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2) துறை, நாள் 19.12.2018.
3. அரசாணை (நிலை) எண்.70, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2) துறை, நாள் 24.12.2018.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.த.3/18498/2018, நாள், 08.03.2019.

---

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 10 மாவட்டங்களில் 11 ஆதிதிராவிடர் நல விடுதிகள் நபார்டு RIDF- XXIII திட்டத்தின் கீழ் ரூ.1386.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மாவட்டம், இராயபுரத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே ரூ.3,52,76,432/- மதிப்பீட்டில் இரண்டு மாணவியர் விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் அரசு கட்டடங்களில் 1297 விடுதிகளில் (1254 ஆதிதிராவிடர் விடுதிகள் + 43 பழங்குடியினர் நல விடுதிகள்) தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு அவர்தம் உடைமைகளை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு ஏற்கனவே அறையில் அமைக்கப் பெற்றிருக்கும் R.C.C அலமாரிகளுக்கு தனித்தனி இரும்புக் கதவு மற்றும் பூட்டு சாவி

த.பி.பா.

ஏற்பாடுகளுடன் கூடிய வசதிகளை **ரூ.25.94 கோடி** மதிப்பீட்டில் ஏற்படுத்துவதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் மேற்காணும் அரசாணைகளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட இனங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற முன்மொழிவின் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசிடம் கோரியுள்ளார்:-

| வ. எண் | அரசாணை (நிலை) எண் மற்றும் நாள் | பணிகளின் விவரம் | நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|
| 1 | 69, நாள் 19.12.2018 | இராயபுரத்தில் இரண்டு கல்லூரி மாணவியர் விடுதிகள் கட்டுதல் | 352.760 | "4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதன செலவு 01 ஆதிதிராவிடர் நலன் 277 கல்வி பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டங்கள் II மாநிலத்திட்டம் JA ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல் 16 பெரும் பணிகள் (து.தொ.கு.எண்.4225 01 277 JA 1603)" |
| 2 | 70, நாள் 24.12.2018 | 1297 விடுதிகளில் ஸ்டீல் ராக் பூட்டு தாழ்ப்பாளுடன் செய்து தருதல் | 2594.00 | |
| 3 | 27, நாள் 28.03.2018 | 11 ஆதிதிராவிடர் நல விடுதிகள் நபார்டு திட்டத்தின்கீழ் கட்டுதல் | 1386.99 | |
| | | **மொத்தம்** | **4333.75** | |

5. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. மேலே பத்தி 4–இல் நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையான ரூ.43,33,75,000–இல் மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.14,44,59,000/–த்தினை (ரூபாய் பதினான்கு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக முதல் கட்ட தவணையாக ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மீதமுள்ள தொகையினை, பணி முன்னேற்ற அறிக்கையின் அடிப்படையில் விடுவிப்பு செய்யப்படுவதற்கு ஏதுவாக, தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019–2020–ஆம் நிதியாண்டில் அரசுக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:-

த.பி.பா.

| வ. எண் | அரசாணை (நிலை) எண் மற்றும் நாள் | பணிகளின் விவரம் | நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | முதல் கட்ட தவணையாக விடுவிக்கப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 69, நாள் 19.12.2018 | இராயபுரத்தில் இரண்டு கல்லூரி மாணவியர் விடுதிகள் கட்டுதல் | 352.760 | 117.59 |
| 2. | 70, நாள் 24.12.2018 | 1297 விடுதிகளில் ஸ்டீல் ராக் பூட்டு தாழ்ப்பாளுடன் செய்து தருதல் | 2594.00 | 864.67 |
| 3. | 27, நாள் 28.03.2018 | 11 ஆதிதிராவிடர் நல விடுதிகள் நபார்டு திட்டத்தின்கீழ் கட்டுதல் | 1386.99 | 462.33 |
| | | **மொத்தம்** | **4333.75** | **1444.59** |

6. மேலே பத்தி–5 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> "4225 –ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள், JA – ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல்–416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்
> (IFHRMS DPC 4225 01 277 JA 41601)
> (Old DPC 4225 01 277 JA 1603)"

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட நிதியை 2019–2020 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர் நோக்கி ஆதிதிராவிடர் நல இயக்குநர் இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறார். இச்செலவினம் 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் மேற்கண்ட செலவினத்தை துணை மதிப்பீடுகள் 2019–2020–இல் குறிப்பிட்டுச் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவினை அரசின் நிதி (ஆதி(ம)பந/வ.செ.பொ–1)த் துறைக்கு தவறாமல் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே குறிப்பிட்டுள்ள பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998/விதிகள் 2000–ஐ பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

த.பி.பா.

9. மேலே பத்தி –5 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் "

(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)
(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

10. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியை விரைவாக செயல்படுத்துதல் மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.23162/ஆதி(ம)பந/ 2019, நாள்.04.06.2019–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.389 (முன்னூற்று எண்பத்து ஒன்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,

த.பி.பா.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.

நிதி(ஆதி(ம)பந / வ.செ.பொ–I)துறை, தலைமைச் செயலகம், சென்னை –600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ஆதிந.5/ஆதிந 7) துறை,
சென்னை –600 009.

இருப்புக்கோப்பு /உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

6/6/19

பிரிவு அலுவலர்.

6.6.19